UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education Advanced Level

**TAMIL** **9689/04**

Paper 4 Texts

October/November 2006

**2 hours 30 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.

Answer any **three** questions, each on a different text. You must choose one from Section 1, one from Section 2 and one other.
Write your answers in **Tamil** on the separate answer paper provided.
Dictionaries are not permitted.
You may take unannotated set texts into the examination.
You should write between 500 and 600 words for each answer.
You are advised to divide your time equally between answers.
At the end of the examination, fasten all your work securely together.
All questions in this paper carry equal marks.

**பரீட்சார்த்திகள் செய்ய வேண்டியவை**

- விடைகள் எழுதும் தாளில் உங்களுடைய பெயர், நம்பர், சென்டர் நம்பர் ஆகியவற்றை அதற்கென்று குறித்த இடத்தில் எழுதவும்.
- ஏதாவது மூன்று கேள்விகளுக்கு வேறு வேறு பாடப் பகுதியில் இருந்து எடுத்து விடைகள் எழுதவும்.
- உங்களுடைய விடைகளைத் தனியாகக் கொடுக்கப்பட்டுள்ள தாள்களில் தமிழில் எழுதவும். ஒவ்வொரு கேள்விக்கும் விடை 500 முதல் 600 சொற்களில் இருக்க வேண்டும்.
- இரண்டு மூன்று தாள்களைப் பயன்படுத்தினால் எல்லாவற்றையும் சேர்த்துக் கட்டிக் கொடுக்கவும்.

**பரீட்சார்த்திகளுக்குத் தகவல்கள்**

- அகராதிகளைத் தேர்வு நடக்கும் இடத்துக்குக் கொண்டு போகக் கூடாது.
- ஒவ்வொரு விடைக்கும் 25 புள்ளிகள் கொடுக்கப்படும். மொத்தம் மூன்று விடைகளுக்கும் 75 புள்ளிகள்.
- விளக்கங்கள் எழுதாத புத்தகங்களைத் தேர்வு நடக்கும் இடத்திற்குக் கொண்டு போகலாம்.
- காலத்தைச் சமமாகப் பிரித்து மூன்று கேள்விகளுக்கும் விடை எழுதவும்.

This document consists of **3** printed pages and **1** blank page.

SP (NH) S98475/3
© UCLES 2006

UNIVERSITY *of* CAMBRIDGE
International Examinations

**[Turn over**

www.theallpapers.com

# பகுதி 1

**1 ஏதாவது ஒரு வினாவிற்கு (அ அல்லது ஆ) விடை எழுதவும்.**

**அ. குறுந்தொகை**

ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து
அளியதாமே கொடுஞ்சிறைப் பறவை
இறையுற வோங்கிய நெறியயல் மராஅத்த
பிள்ளை யுள்வாய்ச் செரீஇய
இரைகொண்டமையின் விரையுமாற் செலவே

(i) தாமோதரனாரின் இப்பாடலடிகளின் தெளிவான பொருளை எழுதுக.

(ii) காமமிக்க கழிபடர்கிளவி எனும் துறை இப்பாடலுடன் எவ்வாறு பொருந்தி அமைகிறது?

**ஆ. புறநானூறு**

மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடிய, தெண்கடல் வளாகம்... எனத் தொடங்கும் பாடல் பொருளை அப்பாடலின் திணை, துறைகளுடன் பொருத்தி எழுதுக.

**2 ஏதாவது ஒரு வினாவிற்கு (அ அல்லது ஆ) விடை எழுதவும்.**

**அ. திருக்குறள்-திருவள்ளுவர்**

அறத்தி னூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்திலி னூங்கில்லை கேடு

மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற

அழுக்காறு அவாவெகுளி இன்னாச் சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்

அன்றறிவாம் என்னாது அறம் செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தானிடை

அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல

(i) அறத்தைவிடச் சிறப்பினைத் தருவது எதுவுமில்லை என்பதனை வள்ளுவர் எவ்வாறு விளக்குகின்றார்?

(ii) அறம் செய்யும் வழி பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகள் யாவை?

ஆ. அன்புடைமை எனும் அதிகாரத்துள் வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.



www.theallpapers.com

**3 ஏதாவது ஒரு வினாவிற்கு (அ அல்லது ஆ) விடை எழுதவும்.**

**தேவாரம்**

அ. உருவளர்பவளமேனி ஒளிநீறணிந்து வுமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேலணிந்தென் உளமே புகுந்ததனால்
திருமகள் கலையதூர்தி செயமாதுபூமி திசைதெய்வமான பலவும்
அறநெதிநல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே.

நஞ்சணிகண்டன் எந்தை மடவாள் தனோடும் விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேலணிந்தென் உளமே புகுந்ததனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும் மிகையான பூதமவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே.

(i) சிவன் திருஞானசம்பந்தருக்கு எவ்வாறு காட்சி தருகிறார்?

(ii) எவையெவை அடியார்க்கு நல்லன என்று சம்பந்தர் குறிப்பிடுகின்றார்?

ஆ. கோளறுபதிகத்துள் ஞானசம்பந்தர் குறிப்பிடும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

## பகுதி 2

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுள்ளும் இரு பிரிவுகள் உள்ளன. ஏதாவது ஒன்றிற்கு மட்டும் (அ அல்லது ஆ) விடை தருக.**

**4 பாரதியார் பாடல்கள்**

அ. கண்ணன் என் தோழன் எனும் பாடலில் பாரதியார் கண்ணனின் இயல்புகளாகக் குறிப்பிடுவன யாவை?

ஆ. **பாரதிதாசன் பாடல்கள்**

பாரதிதாசன் நெடும் பகற்கனவில் கண்ட நெஞ்சுறுத்தும் கானல் குறித்து எழுதுக.

**5 நாடகம் – தண்ணீர் தண்ணீர்**

அ. தண்ணீர் தண்ணீர் எனும் நாடகம் எவ்வாறு ஒரு சிறந்த நாடகமாக அமைகிறது என எழுதுக.

ஆ. இந்த நாடகத்தில் உங்களுக்குப் பிடித்த ஏதாவது ஒரு பாத்திரம் குறித்து எழுதுக.

**6 சிறுகதை – முள்**

அ. ஒரு உண்ணாவிரதத்தின் கதை எனும் சிறுகதையில் பேசப்பெறும் சமூகக் கருத்துகள் குறித்து விளக்கி எழுதுக.

ஆ. மதிப்பு மிகுந்த மலர் எனும் சிறுகதையுள் இடம் பெற்றிருக்கும் சிறுகதைக் கூறுகள் குறித்து விவரிக்க.


www.theallpapers.com

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

University of Cambridge International Examinations is part of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.



www.theallpapers.com